අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/09/12/08/10/III/2022 ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. දිනය / திகதி / Date 2024.06.

***சுற்றுநிருப இலக்கம்: 22/2024***

*அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள்,*
*அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,*
*அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,*
*அனைத்து கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,*
*அனைத்து பாடசாலை அதிபர்கள்,*

***<u>சுபக புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம்</u>***

*சுபக புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்திற்காக மாணவர்களைத் தெரிவு செய்தல் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள 2020.12.15ம் திகதியும் 34/2024 இலக்கமும் உடைய சுற்றுநிருபம் மற்றும் 2022.12.30ம் திகதியும் 41/2022 இலக்கமும் உடைய சுற்றுநிருபம் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது என்பதுடன், இச் சுற்றுநிருபத்தின் ஆலோசனைகள் 2024 வருடத்தில் (2022 வருடத்திற்குரிய க.பொ.த (சா.த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள்) மற்றும் இனிவரும் காலங்களில் சுபக புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்திற்காக மாணவர்களை தெரிவு செய்யும் போது வலுவில் இருக்கும்.*

*எதிர்கால சவால்களை வெற்றிக் கொள்வதற்கு அவசியமான திறமைகளுடன் கூடிய படைப்பாற்றல் மிக்க இளைஞர் சமுதாயமொன்றை உருவாக்குவதர்காக பல்வேறு துறைகளிலும் விசேட திறமைகளை வெளிக்காட்டும் பாடசாலை மாணவர்களது திறமைகளை தேசிய மட்டத்தில் கௌரவித்தல், மீத்திறன் மிக்க மாணவர்களது விசேட திறன்களை விருத்தி செய்வதனூடாக பாடசாலைக் கல்வி இலக்குகளை அடைந்துகொள்வதற்கு வாய்ப்பளித்தல் மற்றும் நாட்டின் அபிவிருத்திக்கு விசேடமான பங்களிப்பினை வழங்கக்கூடிய பல்வேறு துறைகளில் விசேட திறமைகளை வெளிக்காட்டும் மாணவர்களை குறித்த திறமைகளை மேலும் விருத்தி செய்துகொள்ள ஊக்குவிப்பது இந்த சுபக புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் பிரதானமான எதிர்பார்ப்பாகும்.*

***01. புலமைப் பரிசிலுக்காக விண்ணப்பிப்பதற்கு அவசியமான அடிப்படைத் தகைமைகள்***

*1.1 இலங்கைப் பிரஜையாக இருத்தல்.*

*1.2 உரிய வருடத்தில் அரச பாடசாலை ஒன்றில் க.பொ.த (உ.த) கற்பதற்கான ஆகக் குறைந்த தகைமைகளுடனேனும் சித்தியடைந்து, தற்போது க.பொ.த (உ.த) கற்பதற்கு ஆரம்பித்துள்ள தரம் 12 இல் கல்வி கற்கும் மாணவன்/ மாணவியாக இருத்தல்.*

*1.3 சிறந்த நடத்தையுடன் கூடிய மாணவனாக/ மாணவியாக இருத்தல்.*

*1.4 விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் துறைக்குரியதான செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டிருத்தல்.*

***02. இப் புலமைப் பரிசிலுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பப் படிவம் (இணைப்பு 01) மற்றும் அதற்குரிய ஆலோசனைகள் தொடர்பில் மாணவர்கள்/ பெற்றோர் அறியப்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் குறித்த ஆலோசனைகளை பாடசாலை அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்துவது அதிபரின் பொறுப்பாகும்.***

### *03. விண்ணப்பப் படிவங்களை முன்னிலைப்படுத்துதல்.*

*3.1 இவ் விடயம் தொடர்பில் உரிய விண்ணப்பப் படிவத்தின் மாதிரி அமைப்பிற்கு (இணைப்பு 01) அமைய மாணவர்களால் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை இரண்டு பிரதிகளாக தயாரித்து, உரிய சான்றிதழ்களதும் பிரதிகளுடன் தற்போது க.பொ.த (உ.த) கற்கும் பாடசாலையின் அதிபரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். க.பொ.த (உ.த) கற்பதற்காக வேறு பாடசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர், அவர் க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை அதிபரது பரிந்துரையுடன் க.பொ.த (உ.த) கற்கும் பாடசாலையின் அதிபரிடம் விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.*

*3.2 இப் புலமைப்பரிசில் கொடுப்பனவானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள 5 விசேட வகுதிகளின் கீழ் வழங்கப்படும்.*

- *I. வகுதி இல. 01 – புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பம் சார் ஆக்கங்களுக்காக பெற்றுள்ள வெற்றிகள்*
- *II. வகுதி இல. 02 - அழகியர் சார் செயற்பாடுகளில் பெற்றுக் கொண்ட வெற்றிகள்*
- *III. வகுதி இல. 03 - விளையாட்டுச் செயற்பாடுகளில் பெற்றுக் கொண்ட வெற்றிகள்*
- *IV. வகுதி இல. 04 - விஞ்ஞானம், கணிதம், மொழி, தகவல் தொழில்நுட்பம் உட்படலாக ஏனைய பாடங்களுக்காக பெற்றுக் கொண்ட வெற்றிகள்*
- *V. வகுதி இல. 05 - இணைப் பாடவிதான செயற்பாடுகளில் பெற்றுக் கொண்ட வெற்றிகள்*

*ஒன்றிற்கு மேற்பட்ட வகுதிகளின் கீழு விண்ணப்பிப்பதாயின் ஒவ்வொரு வகுதிக்கும் தனித்தனியாக விண்ணப்பப் படிவங்களை முன்னிலைப்படுத்துதல் வேண்டும்.*

*3.3 மேலே 1.1 முதல் 1.4 வரையில் உள்ள விடயங்களுக்கு அமைய அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்யும் மாணவன்/ மாணவி தனது விசேட திறமைகளின் அடிப்படையில் 3.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு வகுதியின் கீழும் விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிக்க முடியும்.*

### *04. தெரிவு செய்வதற்குரிய செயன்முறை*

*இச் சுற்றுநிருபத்தின் 06ம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி வழங்கல் திட்டத்திற்கமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறையினைப் பின்பற்றி, ஒவ்வொரு மட்டங்களின் போதும் விண்ணப்பப் படிவங்கள் மற்றும் சான்றிதழ்களை நன்று பரிசீலித்து விண்ணப்பப் படிவத்தின் இரண்டு பிரதிகளிலும் உரிய நிரலில் புள்ளிகளைக் குறிப்பிடுதல் வேண்டும்.*

*உரிய திகதிக்குப் பின்னர் பாடசாலைக்கு கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் மற்றும் உரிய விண்ணப்பப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான சான்றிதழ்களின் பிரதிகள் இல்லாத விண்ணப்பப் படிவங்களை நிராகரித்தல் வேண்டும்.*

#### *4.1 பாடசாலை மட்டம்*

*I. பாடசாலைக்கு கிடைக்கப்பெறும் அனைத்து விண்ணப்பப் படிவங்களதும் அடிப்படைத் தகவல்களை ஆவணப்படுத்தி பாடசாலையில் பேணுதல் வேண்டும். (சீ.ஆர் கொப்பியில் அல்லது கணிணியில் பதிவு செய்து அதனை அச்சிட்டு ஆவணப்படுத்திக் கொள்ள வேண்டும்)*

II. *அதிபரது தலைமையில் இரண்டு சிரேஷ்ட ஆசிரியர்களது அங்கத்துவத்துடன் கூடிய (மூன்று பேர் கொண்ட) பாடசாலைத் தெரிவுக் குழுவினால் விண்ணப்பப் படிவங்கள் பரிசீலனை செய்யப்பட்டு வழங்கப்படும் புள்ளிகள், விண்ணப்பப் படிவத்தின் புள்ளி வழங்கும் நிரல் 01 இல் குறிப்பிடப்படல் வேண்டும்.*

III. *பாடசாலைக்கு கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கையானது 150 ஐயும் தாண்டி குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையில் இருப்பின் மாத்திரம் விண்ணப்பப் படிவங்களைப் பரிசீலனை செய்யும் செயற்பாடுகளை துரிதப்படுத்துவதையும், சரியாக மேற்கொள்வதையும் இலகுவாக மேற்கொள்வதையும் கருத்தில் கொண்டு பொருத்தமானவாறு பிரதி/ உதவி அதிபர் ஒருவர் அல்லது பகுதித் தலைவர்/ தரங்களின் பிரதானியாக செயற்படக்கூடிய ஆசிரியர் ஒருவரது தலமையில் ஒன்றிற்கு மேற்பட்ட பாடசாலைத் தெரிவுக் குழுக்களை நியமித்துக் கொள்ள முடியும். இருப்பினும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களது பெயர் பட்டியலை அனுப்பும் போது குறித்த தெரிவுக் குழுக்களால் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களது பெயர் பட்டியல்களை சரிபார்த்து உறுதிப்படுத்தும் பணியினை அதிபர் மேற்கொள்ள வேண்டும்.*

IV. *அவ் அவ் வகுதியின் கீழ் ஒவ்வொரு மாணவன்/ மாணவியரதும் தகைமைகளை உறுதிப்படுத்திக் கொண்தடன் பின்னர் சான்றிதழ்களது மூலப் பிரதிகளை பரிசோதித்து சுற்றுநிருபத்தின் பிரகாரம் தகைமைகளைக் கொண்டுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களதும் பெயர் பட்டியல்களை ஒவ்வொரு வகுதிகளின் கீழும் தனித் தனியாக இணைப்பு 02(A) மாதிரிப் படிவத்திற்கமைய மொத்தப் புள்ளிகளின் இறங்குவரிசை அடிப்படையில் விண்ணப்பதாரர்களது பெயர்களை வரிசைப்படுத்தி பட்டியலை தயாரித்துக் கொள்ள வேண்டும். குறித்த மாதிரிப் படிவத்துடன் (வன் பிரதி மற்றும் மென் பிரதிகள்) விண்ணப்பதாரர்களது விண்ணப்பப் படிவங்கள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளையும் வரிசைப்படி தயார்படுத்தி அதிபர் அவற்றை சான்றுப்படுத்தி அவ் விண்ணப்பப் படிவங்களை வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். அவற்றின் அடுத்த பிரதிகளை பாடசாலையில் பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும்.*

### *4.2 வலய மட்டம்*

I. *வலய மட்டத்தில் சுபக புலமைப் பரிசில் நிகச்சித்திட்டத்தின் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளுக்காக பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரை வலயக் கல்விப் பணிப்பாளர் நியமிக்க வேண்டும்.*

II. *இச் சுற்றுநிருபத்தின் இணைப்பு 02 (A) மாதிரிப் படிவத்துடன் அவ் அப் பாடசாலைகளிடமிருந்து கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் மற்றும் உரிய சான்றிதழ்கள்/ ஆவணங்களை மேலே குறிப்பிடப்பட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரது ஒருங்கிணைப்புடன் கீழ்வருமாறு பரிசீலனை செய்துகொள்ள வேண்டும்.*

III. *வலயக் கல்விப் பணிப்பாளரது மேற்பார்வையின் கீழ், சிரேஷ்ட பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரது தலைமையில், மேலும் இரண்டு பதவி நிலை உத்தியோகத்தர்களது அங்கத்துவத்துடன் கூடிய (மொத்தம் மூன்று பேர் உள்ளடங்கிய) வலய தெரிவுக் குழுவினை அமைத்துக் கொள்ள வேண்டும். சுற்றுநிருபத்திற்கமைய வழங்கப்படும் புள்ளிகளை விண்ணப்பப் படிவத்தின் புள்ளி வழங்கும் நிரல் 02 இல் குறிப்பிடுதல் வேண்டும்.*

IV. *வலயக் கல்வி அலுவலகத்திற்கு கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கையானது 150 ஐயும் தாண்டி குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையில் இருப்பின் மாத்திரம் விண்ணப்பப் படிவங்களைப் பரிசீலனை செய்யும் செயற்பாடுகளை துரிதப்படுத்துவதையும், சரியாக மேற்கொள்வதையும் இலகுவாக*

மேற்கொள்வதையும் கருத்தில் கொண்டு பொருத்தமானவாறு ஒன்றிற்கு மேற்பட்ட வலய தெரிவுக் குழுக்களை நியமித்துக் கொள்ள முடியும். இருப்பினும் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களது பெயர் பட்டியலை அனுப்பும் போது குறித்த தெரிவுக் குழுக்களால் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களது பெயர் பட்டியல்களை சரிபார்த்து உறுதிப்படுத்தும் பணியினை வலயக் கல்விப் பணிப்பாளர் மேற்கொள்ள வேண்டும்

V. இதன் போது சான்றிதழ்களை பரிசீலனை செய்த பின்னர் வலய தெரிவுக் குழுவினால் வழங்கப்படும் புள்ளிகள் மற்றும் பாடசாலைத் தெரிவுக் குழுவினால் வழங்கப்பட்ட புள்ளிகளுக்கிடையே ஏதேனும் வித்தியாசங்கள் இருப்பின் வலயத் தெரிவுக் குழுவினால் வழங்கப்படும் புள்ளிகள் சரியானவையாக ஏற்றுக் கொள்ளப்படும்.

VI. ஒவ்வொரு வகுதிகளின் கீழும் 15 புள்ளிகள் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்று தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களது பெயர் பட்டியல்களை தனித் தனியாக இணைப்பு 02 (B) மாதிரிப் படிவத்திற்கு அமைவாக மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் இறங்குவரிசைப் படி தயார்படுத்திக் கொள்ள வேண்டும். குறித்த மாதிரிப் படிவத்துடன் (வன் பிரதி மற்றும் மென் பிரதிகள்) அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பப் படிவங்கள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளை வரிசைப்படி தயார்படுத்தி வலயக் கல்விப் பணிப்பாளரால் சான்றுப்படுத்தி மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

அதற்கு மேலதிகமாக 15 புள்ளிகளை விடக் குறைவாக புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களது பெயர் பட்டியலையும் இணைப்பு 02(B) மாதிரிப் படிவத்திற்கு அமைவாக மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் இறங்குவரிசைப் படி பிரத்தியேகமாக தயார்படுத்தி மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

VII. மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்டு வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்படும் புலமைப் பரிசில்தாரர்கள் சுபக புலமைப் பரிசிலைப் பெற்றுக் கொள்ள தகுதி பெறுவதுடன் பாடசாலை அதிபர்களூடாக மாணவர்களை அறியப்படுத்தி அவர்களது வங்கிக் கணக்கு (இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கி) விபரங்கள் மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி ஆகியவற்றை இணைப்பு 03 இனூடாக பெற்றுக் கொள்ள நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

VIII. தகுதி பெற்று தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் சுபக புலமைப் பரிசில்தாரர்களுக்கு புலமைப் பரிசில் தவணைக் கொடுப்பனவுத் தொகையினை வலயக் கல்வி அலுவகத்தினால் புலமைப் பரிசில்தாரரின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக பரிமாற்றம் செய்தல் வேண்டும்.

### 4.3 மாகாண மட்டம்

I. மாகாண மட்டத்தில் சுபக புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை மாகாணக் கல்விப் பணிப்பாளர் மேற்கொள்ள வேண்டும்.

II. மாகாணக் கல்விப் பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் சிரேஷ்ட பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரது தலைமையில் மேலும் மூன்று பதவி நிலை உத்தியோகத்தர்களது அங்கத்துவத்துடன் (மொத்தம் மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட) கூடிய மாகாணத் தெரிவு குழு ஒன்றை நியமித்து விண்ணப்பப்

படிவங்களை பரிசீலனை செய்து வழங்கப்படும் புள்ளிகளை விண்ணப்பப் படிவத்தின் புள்ளி வழங்குவதற்குரிய நிரல் 03 இல் குறிப்பிடுதல் வேண்டும்.

III. மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கையானது 150 ஐயும் தாண்டி குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையில் இருப்பின் மாத்திரம் விண்ணப்பப் படிவங்களைப் பரிசீலனை செய்யும் செயற்பாடுகளை துரிதப்படுத்துவதையும், சரியாக மேற்கொள்வதையும் இலகுவாக மேற்கொள்வதையும் கருத்தில் கொண்டு பொருத்தமானவாறு ஒன்றிற்கு மேற்பட்ட தெரிவுக் குழுக்களை நியமித்துக் கொள்ள முடியும். இருப்பினும் கல்வி அமைச்சிற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களது பெயர் பட்டியலை அனுப்பும் போது குறித்த தெரிவுக் குழுக்களால் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களது பெயர் பட்டியல்களை சரிபார்த்து உறுதிப்படுத்தும் பணியினை மாகாணக் கல்விப் பணிப்பாளர் மேற்கொள்ள வேண்டும்

IV. அவ் அம் மாகாணங்களுக்கமைய சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஒரு வகுதியின் கீழ் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதுடன் ஐந்து வகுதிகளின் கீழும் சமமாக மாணவர்களைத் தெரிவு செய்ய நடவடிக்கையெடுத்தல் வேண்டும். ஒரு வகுதியின் கீழ் உரிய எண்ணிக்கையானவர்கள் இல்லை எனின் ஏனைய வகுதிகளுக்கு அவ் எண்ணிக்கையினை சம விகித அடிப்படையில் பகிர்ந்தளிக்க முடியுமான வகையில் மொத்த மாணவர்களையும் தெரிவு செய்தல் வேண்டும்.

**அட்டவணை இலக்கம் 01 – ஒவ்வொரு மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள புலமைப் பரிசில்களின் எண்ணிக்கை**

| மாகாணம் | வழங்கப்படும் மொத்த புலமைப் பரிசில்களின் எண்ணிக்கை |
|---|---|
| மேல் | 200 |
| மத்திய | 135 |
| தென் | 125 |
| வட மேல் | 125 |
| சபரகமுவ | 100 |
| கிழக்கு | 95 |
| வட மத்திய | 75 |
| ஊவா | 75 |
| வடக்கு | 70 |

V. அதற்கமைய, மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட புலமைப் பரிசில்தாரர்களது பெயர் பட்டியல் இணைப்பு 04 மாதிரிப் படிவத்திற்கமைவாக தயாரிக்கப்படல் வேண்டும். குறித்த படிவத்தின் வன் பிரதி மற்றும் மென் பிரதிகள் மாகாணக் கல்விப் பணிப்பாளரால் சான்றுப்படுத்தப்பட்டு கல்வி அமைச்சின் பாடசாலை செயற்பாடுகள் கிளையின் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி கல்விச் செயலாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்குரிய அனுமதியைப் பெற்றுக் கொண்ட பின்னர் உரிய ஒதுக்கீடுகள் கல்வி அமைச்சினால் அவ் அம் மாகாணங்களுக்கு வழங்கப்படும்.

VI. புலமைப் பரிசில்தாரர்களது பெயர் பட்டியலுக்கான அனுமதி கிடைக்கப் பெற்றதன் பின்னர் அவ் விடயம் தொடர்பில் உரிய வலயக் கல்விப் பணிப்பாளர்களை அறியப்படுத்த வேண்டும் என்பதுடன் மாகாணத்தின் ஒவ்வொரு வலயங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டுள்ள புலமைப் பரிசில்தாரர்களுக்கு

*உரித்தான புலமைப் பரிசில் தவணைக் கொடுப்பனவுத் தொகையினை செலுத்துவதற்கு அவசியமான நிதி ஒதுக்கீட்டினை மாகாணக் கல்வித் திணைக்களம் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு வழங்குதல் வேண்டும்.*

### *4.4 தேசிய மட்டம்*

I. *ஒவ்வொரு வருடமும் விண்ணப்பப் படிவங்களை கோருவதற்குரிய ஆலோசனைக் கடிதம் கல்வி அமைச்சினூடாக மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பிவைக்கப்படுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

II. *மாகாண மட்டத்திலிருந்து அனுப்பிவைக்கப்படும் புலமைப் பரிசில்தாரர்களின் எண்ணிக்கைக்கு புலமைப் பரிசில் தவணைக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு போதியளவு நிதி ஒதுக்கீட்டினை கல்வி அமைச்சு மாகாணக் கல்வித் திணைக்களங்களுக்கு வழங்குதல் வேண்டும்.*

***4.5 மாணவர்/ மாணவி ஒருவர் ஒன்றிற்கு மேற்பட்ட வகுதிகளின் கீழ் புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பித்திருந்தாலும் ஒரு வகுதியின் கீழ் மாத்திரமே இந்த புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொள்ள முடியும்.***

## *05. தெரிவு செய்வதற்காக பயன்படுத்தப்படும் வகுதி, நியதிகள் மற்றும் உரிய புள்ளி வழங்கல் திட்டம்*

*2.4 இன் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 05 வகுதிகளை அடிப்படையாக கொண்டு விசேட நியதிகள் மற்றும் பொது நியதிகளின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும்.*

*இதன் போது, மாணவன்/ மாணவி ஒருவர் உரிய வருடத்தை அண்மித்த தொடர்ச்சியான 4 வருடங்களுக்குள் பெற்றுக் கொண்ட வெற்றிகள் மாத்திரம் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் விசேட நியதிகளின் கீழ் புள்ளி வழங்கப்பட்டுள்ள மாணவர்கள் மாத்திரம் புலமைப் பரிசில் பெற்றுக் கொள்ள தகுதி பெறுவார்கள்*

### *I. விசேட நியதிகள் - உச்ச பட்சம் 60 புள்ளிகள்*

*இதன் கீழ் மாணவன்/ மாணவி ஒருவர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளுள் ஒரு துறையில் மாத்திரம் வெளிக்காட்டிய திறமைகள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.*

i. *புத்தாக்கங்கள் மற்றும் தொழில்நுட்பம் சார் ஆக்கங்களுக்காக பெற்றுக் கொண்ட வெற்றிகள்*
ii. *அழகியல் சார் செயற்பாடுகளில் பெற்றுக் கொண்ட வெற்றிகள்*
iii. *விளையாட்டில் பெற்றுக் கொண்ட வெற்றிகள்*
iv. *விஞ்ஞானம், கணிதம், மொழிகள், தகவல் தொழில்நுட்பம் உட்படலாக ஏனைய பாடங்களில் பெற்றுக் கொண்ட வெற்றிகள்*
v. *இணைப் பாடவிதான செயற்பாடுகளுக்காக பெற்றுக் கொண்ட வெற்றிகள்*

### *II. பொது நியதிகள் I - உச்ச பட்சம் 20 புள்ளிகள்*

*மாணவன்/ மாணவி ஒருவர் தாம் விண்ணப்பிக்கும் வகுதி தவிர்த்து பிறிதொரு வகுதியொன்றின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திறமைகளுக்குரியதாக அட்டவணை*

*இலக்கம் 02ன் பொது நியதிகள் I இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளூடாக மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.*

*இதன் போது விண்ணப்பிக்கும் வகுதிக்குரிய விசேட நிதியதிகளுக்கு புள்ளிகள் வழங்கப்படலாகாது.*

*III.* **பொது நியதிகள் II - உச்ச பட்சம் 20 புள்ளிகள்**

*ஏனைய திறமைகள் அட்டவணை இலக்கம் 02 இலுள்ள பொது நியதிகள் II இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளூடாக மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.*

*IV.* *இச் சுற்றுநிருபத்தின் 6.1 முதல் 6.10 வரையில் குறிப்பிடப்பட்டுள்ள முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள புள்ளி வழங்கல் திட்டத்தைப் பின்பற்றி மேற்படி பகுதி I, II,III ஆகியவற்றிற்கு புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும்.*

**அட்டவணை 02- நியதிகளுக்காக வழங்கப்பட வேண்டிய புள்ளிகள்**

| நியதிகள் | வகுதி இல. 01 | வகுதி இல. 02 | வகுதி இல. 03 | வகுதி இல. 04 | வகுதி இல. 05 |
|---|---|---|---|---|---|
| **விசேட நியதிகள் (உச்ச பட்சம் 60 புள்ளிகள்)** | புத்தாக்கங்களுக்காக பெற்றுக் கொண்ட வெற்றிகள் (60 புள்ளிகள்) | அழகியல் சார் செயற்பாடுகளில் பெற்றுக் கொண்ட வெற்றிகள் (60 புள்ளிகள்) | விளையாட்டில் பெற்றுக் கொண்ட வெற்றிகள் (60 புள்ளிகள்) | விஞ்ஞானம், கணிதம், மொழிகள், தகவல் தொழில்நுட்பம் உட்படலாக ஏனைய பாடங்களில் பெற்றுக் கொண்ட வெற்றிகள் (60 புள்ளிகள்) | இணைப் பாடவிதான செயற்பாடுகளில் பெற்றுக் கொண்ட வெற்றிகள் (60 புள்ளிகள்) |
| **பொது நியதிகள் I (உச்ச பட்சம் 20 புள்ளிகள்)** | அழகியல் சார் செயற்பாடுகளில் பெற்றுக் கொண்ட வெற்றிகள் (05 புள்ளிகள்) | புத்தாக்கங்களுக்காக பெற்றுக் கொண்ட வெற்றிகள் (05 புள்ளிகள்) | புத்தாக்கங்களுக்காக பெற்றுக் கொண்ட வெற்றிகள் (05 புள்ளிகள்) | புத்தாக்கங்களுக்காக பெற்றுக் கொண்ட வெற்றிகள் (05 புள்ளிகள்) | புத்தாக்கங்களுக்காக பெற்றுக் கொண்ட வெற்றிகள் (05 புள்ளிகள்) |
| | விளையாட்டில் பெற்றுக் கொண்ட வெற்றிகள் (05 புள்ளிகள்) | விளையாட்டில் பெற்றுக் கொண்ட வெற்றிகள் (05 புள்ளிகள்) | அழகியல் சார் செயற்பாடுகளில் பெற்றுக் கொண்ட வெற்றிகள் (05 புள்ளிகள்) | அழகியல் சார் செயற்பாடுகளில் பெற்றுக் கொண்ட வெற்றிகள் (05 புள்ளிகள்) | அழகியல் சார் செயற்பாடுகளில் பெற்றுக் கொண்ட வெற்றிகள் (05 புள்ளிகள்) |
| | விஞ்ஞானம், கணிதம், மொழிகள், தகவல் தொழில்நுட்பம் உட்படலாக ஏனைய | விஞ்ஞானம், கணிதம், மொழிகள், தகவல் தொழில்நுட்பம் உட்படலாக ஏனைய | விஞ்ஞானம், கணிதம், மொழிகள், தகவல் தொழில்நுட்பம் உட்படலாக ஏனைய | விளையாட்டில் பெற்றுக் கொண்ட வெற்றிகள் (05 புள்ளிகள்) | விளையாட்டில் பெற்றுக் கொண்ட வெற்றிகள் (05 புள்ளிகள்) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பாடங்களில் பெற்றுக் கொண்ட வெற்றிகள் *(05 புள்ளிகள்)* | பாடங்களில் பெற்றுக் கொண்ட வெற்றிகள் *(05 புள்ளிகள்)* | பாடங்களில் பெற்றுக் கொண்ட வெற்றிகள் *(05 புள்ளிகள்)* | | |
| | இணைப் பாடவிதான செயற்பாடுகளில் பெற்றுக் கொண்ட வெற்றிகள் *(05 புள்ளிகள்)* | இணைப் பாடவிதான செயற்பாடுகளில் பெற்றுக் கொண்ட வெற்றிகள் *(05 புள்ளிகள்)* | இணைப் பாடவிதான செயற்பாடுகளில் பெற்றுக் கொண்ட வெற்றிகள் *(05 புள்ளிகள்)* | இணைப் பாடவிதான செயற்பாடுகளில் பெற்றுக் கொண்ட வெற்றிகள் *(05 புள்ளிகள்)* | விஞ்ஞானம், கணிதம், மொழிகள், தகவல் தொழில்நுட்பம் உட்படலாக ஏனைய பாடங்களில் பெற்றுக் கொண்ட வெற்றிகள் *(05 புள்ளிகள்)* |
| **பொது நியதிகள் *II* *(உச்ச பட்சம் 20 புள்ளிகள்)*** | *க.பொ.த (சா.த) பெறுபேறுகளின் அடிப்படையில் (06 புள்ளிகள்)* | *க.பொ.த (சா.த) பெறுபேறுகளின் அடிப்படையில் (06 புள்ளிகள்)* | *க.பொ.த (சா.த) பெறுபேறுகளின் அடிப்படையில் (06 புள்ளிகள்)* | *க.பொ.த (சா.த) பெறுபேறுகளின் அடிப்படையில் (06 புள்ளிகள்)* | *க.பொ.த (சா.த) பெறுபேறுகளின் அடிப்படையில் (06 புள்ளிகள்)* |
| | ஆராய்ச்சித் துறைக்குரிய செயற்பாடுகள் மற்றும் வெற்றிகள் *(08 புள்ளிகள்)* | ஆராய்ச்சித் துறைக்குரிய செயற்பாடுகள் மற்றும் வெற்றிகள் *(08 புள்ளிகள்)* | ஆராய்ச்சித் துறைக்குரிய செயற்பாடுகள் மற்றும் வெற்றிகள் *(08 புள்ளிகள்)* | ஆராய்ச்சித் துறைக்குரிய செயற்பாடுகள் மற்றும் வெற்றிகள் *(08 புள்ளிகள்)* | ஆராய்ச்சித் துறைக்குரிய செயற்பாடுகள் மற்றும் வெற்றிகள் *(08 புள்ளிகள்)* |
| | பாடசாலையில் தலைமைத்துவம் வகித்தல் *(03 புள்ளிகள்)* | பாடசாலையில் தலைமைத்துவம் வகித்தல் *(03 புள்ளிகள்)* | பாடசாலையில் தலைமைத்துவம் வகித்தல் *(03 புள்ளிகள்)* | பாடசாலையில் தலைமைத்துவம் வகித்தல் *(03 புள்ளிகள்)* | பாடசாலையில் தலைமைத்துவம் வகித்தல் *(03 புள்ளிகள்)* |
| | *அரச, அரை அரசாங்க, தனியார் நிறுவனங்கள், அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள், யுனெஸ்கோ, யுனிசெப் போன்ற கல்வி அமைச்சின் முறையான அனுமதி பெற்று நடாத்தப்படும் போட்டிகள்/ நிகழ்ச்சித்திட்ட* | *அரச, அரை அரசாங்க, தனியார் நிறுவனங்கள், அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள், யுனெஸ்கோ, யுனிசெப் போன்ற கல்வி அமைச்சின் முறையான அனுமதி பெற்று நடாத்தப்படும் போட்டிகள்/ நிகழ்ச்சித்திட்டங்கள் (உச்ச* | *அரச, அரை அரசாங்க, தனியார் நிறுவனங்கள், அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள், யுனெஸ்கோ, யுனிசெப் போன்ற கல்வி அமைச்சின் முறையான அனுமதி பெற்று நடாத்தப்படும் போட்டிகள்/ நிகழ்ச்சித்திட்டங்கள் (உச்ச பட்சம் 03 புள்ளிகள்)* | *அரச, அரை அரசாங்க, தனியார் நிறுவனங்கள், அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள், யுனெஸ்கோ, யுனிசெப் போன்ற கல்வி அமைச்சின் முறையான அனுமதி பெற்று நடாத்தப்படும் போட்டிகள்/ நிகழ்ச்சித்திட்டங்கள் (உச்ச* | *அரச, அரை அரசாங்க, தனியார் நிறுவனங்கள், அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள், யுனெஸ்கோ, யுனிசெப் போன்ற கல்வி அமைச்சின் முறையான அனுமதி பெற்று நடாத்தப்படும் போட்டிகள்/ நிகழ்ச்சித்திட்டங்கள் (உச்ச* |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ங்கள் (உச்ச பட்சம் 03 புள்ளிகள்) | பட்சம் 03 புள்ளிகள்) | | பட்சம் 03 புள்ளிகள்) | பட்சம் 03 புள்ளிகள்) |

## 06. புள்ளி வழங்கள் முறையின் முழுமையான விவரிப்பு

### 6.1 வகுதி 01- புத்தாக்கங்களில் பெற்றுக் கொண்ட வெற்றிகள்

புத்தாக்கங்கள் சார்ந்ததாக குறிப்பிடப்பட்டுள்ள திறமைகளுக்கு கீழே தரப்பட்டுள்ள அட்டவணை இலக்கம் 03 இன் படி புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும். இதன் போது உச்ச பட்ச புள்ளிகளைப் பெற்ற ஒரு சந்தர்ப்பம் மாத்திரம் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

**அட்டவணை இல. 03: புத்தாக்கங்களுக்கு புள்ளி வழங்கல்.**

| தொடர் இல | போட்டி | மட்டம் | நிலை | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | சர்வதேச போட்டிகளில் முதலாம் நிலை | | | 20 |
| 02 | சர்வதேச போட்டிகளில் முதலாம் அல்லது இரண்டாம் நிலை (2,3) | | | 18 |
| 03 | பேட்டண்ட் உரிமை பெற்றிருத்தல். | | | 16 |
| 04 | புத்தாக்கம் (அகில இலங்கை பாடசாலை ரோபோ தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க போட்டிகள் மற்றும் புத்தாக்குணர் ஆணைக்குழுவினால் ஒழுங்குசெய்யப்படும் போட்டிகளில் எந்தவொரு கருப்பொருளின் கீழும் எந்தவொரு போட்டிப் பிரிவுக்கும் மாத்திரம்) | தேசிய மட்டம் | 1 | 14 |
| 05 | | | 2 | 12 |
| 06 | | | 3 | 10 |
| 07 | | | திறமை | 08 |
| 09 | | மாகாண மட்டம் | 1 | 06 |
| 10 | | | 2 | 04 |
| 11 | | | 3 | 02 |

**உச்ச பட்சம் 60 புள்ளிகள்**

### 6.2 வகுதி இலக்கம் 02- அழகியல் சார் செயற்பாடுகளில் பெற்றுக் கொண்ட வெற்றிகள்

அகில இலங்கை அழகியல் போட்டிகளில் உரிய வருடத்தை அண்மித்த தொடர்ச்சியான 4 வருடங்களில் அட்டவணை இலக்கம் 04 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆகக் கூடியது தனி மற்றும்/ அல்லது குழுப்

*போட்டிகளில் உச்ச பட்ச புள்ளிகளைப் பெற்ற மூன்று சந்தர்ப்பங்கள் மாத்திரம் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.*

***அட்டவணை இலக்கம் 04. அழகியல் சார் செயற்பாடுகளுக்கு புள்ளி வழங்குதல்.***

| ***தொடர் இல்*** | ***தனி/ குழு*** | ***மட்டம்*** | ***நிலை*** | ***புள்ளிகள்*** |
|---|---|---|---|---|
| *01* | *தனி* | *சர்வதேச* | *1* | *20* |
| *02* | | | *2* | *19* |
| *03* | | | *3* | *18* |
| *04* | | *தேசிய* | *1* | *17* |
| *05* | | | *2* | *15* |
| *06* | | | *3* | *13* |
| *07* | | *மாகாண* | *1* | *12* |
| *08* | | | *2* | *09* |
| *09* | | | *3* | *06* |
| *10* | *குழு* | *சர்வதேச* | *1* | *17* |
| *11* | | | *2* | *16* |
| *12* | | | *3* | *15* |
| *13* | | *தேசிய* | *1* | *13* |
| *14* | | | *2* | *12* |
| *15* | | | *3* | *10* |
| *16* | | *மாகாண* | *1* | *08* |
| *17* | | | *2* | *05* |
| *18* | | | *3* | *02* |

### *6.3* ***வகுதி இலக்கம் 03- விளையாட்டில் பெற்றுக் கொண்ட வெற்றிகள்***

*அகில இலங்கை விளையாட்டுப் போட்டிகளுக்குரியதாக உரிய வருடத்தை அண்மித்த தொடர்ச்சியான 4 வருடங்களுக்குள் அட்டவணை இலக்கம் 05 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆகக் கூடியது தனி மற்றும்/ அல்லது குழுப் போட்டிகளில் உச்ச பட்ச புள்ளிகளைப் பெற்ற மூன்று சந்தர்ப்பங்கள் மாத்திரம் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். ஒரு விளையாட்டில் அல்லது நிகழ்வில் வெளிக்காட்டியுள்ள உயர் திறமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.*

***அட்டவணை இலக்கம் 05: விளையாட்டில் வெற்றிகளுக்கு புள்ளி வழங்குதல்***

| ***தொடர் இல்*** | ***தனி/ குழு*** | ***மட்டம்*** | ***நிலை*** | ***புள்ளிகள்*** |
|---|---|---|---|---|
| *01* | *தனி* | *சர்வதேச* | *1* | *20* |
| *02* | | | *2* | *19* |
| *03* | | | *3* | *18* |
| *04* | | *தேசிய* | *1* | *17* |
| *05* | | | *2* | *15* |
| *06* | | | *3* | *13* |
| *07* | | *மாகாண* | *1* | *12* |
| *08* | | | *2* | *09* |
| *09* | | | *3* | *06* |

| | | | | |
|---|---|---|---|---|
| *10* | குழு | சர்வதேச | *1* | *17* |
| *11* | | | *2* | *16* |
| *12* | | | *3* | *15* |
| *13* | | தேசிய | *1* | *13* |
| *14* | | | *2* | *12* |
| *15* | | | *3* | *10* |
| *16* | | மாகாண | *1* | *08* |
| *17* | | | *2* | *05* |
| *18* | | | *3* | *02* |

***உச்ச பட்சம் 60 புள்ளிகள்***

### *6.4 வகுதி இலக்கம் 04- விஞ்ஞானம்/ கணிதம்/ தகவல் தொழில்நுட்பம்/ மொழிகளில் பெற்றுக் கொண்ட வெற்றிகள்*

*கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவின் கீழ் உரிய வருடத்தை அண்மித்த தொடர்ச்சியான 4 வருடங்களுக்குள் அட்டவணை இலக்கம் 06 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உச்ச பட்ச புள்ளிகளை புள்ளிகளைப் பெற்ற மூன்று சந்தர்ப்பங்கள் மாத்திரம் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். ஒரு போட்டிக்குரியதாக வெளிக்காட்டிய உச்ச பட்ச திறமைகளுக்கு மாத்திரம் புள்ளி வழங்கப்படும்.*

***அட்டவணை இலக்கம் 06: பாடங்களின் வெற்றிக்கு புள்ளிகளை வழங்குதல்.***

| **தொடர் இல்** | **தனி/ குழு** | **மட்டம்** | **நிலை** | **புள்ளிகள்** |
|---|---|---|---|---|
| *01* | தனி | சர்வதேச | *1* | *20* |
| *02* | | | *2* | *19* |
| *03* | | | *3* | *18* |
| *04* | | தேசிய | *1* | *17* |
| *05* | | | *2* | *15* |
| *06* | | | *3* | *13* |
| *07* | | மாகாண | *1* | *12* |
| *08* | | | *2* | *09* |
| *09* | | | *3* | *06* |
| *10* | குழு | சர்வதேச | *1* | *17* |
| *11* | | | *2* | *16* |
| *12* | | | *3* | *15* |
| *13* | | தேசிய | *1* | *13* |
| *14* | | | *2* | *12* |
| *15* | | | *3* | *10* |
| *16* | | மாகாண | *1* | *08* |
| *17* | | | *2* | *05* |
| *18* | | | *3* | *02* |

***உச்ச பட்சம் 60 புள்ளிகள்***

### *6.5* வகுதி இலக்கம் *05-* இணைப் பாடவிதான செயற்பாடுகளில் பெற்றுக் கொண்ட வெற்றிகள்

*கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவின் கீழ் உரிய வருடத்தை அண்மித்த தொடர்ச்சியான 4 வருடங்களுக்குள் அட்டவணை இலக்கம் 07 இல் குறிப்பிடப்பட்டுள்ள உச்ச பட்சப் புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட மூன்று சந்தர்ப்பங்கள் மாத்திரம் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். ஒரு பிரிவுக்குரியதாக வெளிக்காட்டிய ஆகக் கூடிய திறமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.*

***அட்டவணை இலக்கம் 07: இணைப் பாடவிதானம் சார் வெற்றிகளுக்கு புள்ளி வழங்குதல்.***

| **செயற்பாடு** | **பெற்றுள்ள பதக்கம்** | **புள்ளிகள்** |
|---|---|---|
| *சாரணர்/ சாரணியர்* | *ஜனாதிபதி சாரணர்/ பெண் சாரணியர் பதக்கம்* | *20* |
| | *பிரதமர் பரிசு/ முதல் நிலை பதக்கம்* | *15* |
| | *சர்வதேச முகாம்கள்/ நிகழ்த்திட்டங்களில் பங்கேற்பு* | *10* |
| | *சாரணர்/ பெண் சாரணியர்/ ரேஞ்சர் அங்கத்துவம்* | *05* |
| *மாணவர் படையணி* | *அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் 1 (ரெஜிமண்ட் சார்ஜண்ட் மேஜர்) (RSM)* | *20* |
| | *அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் 2 (குழுவிற்குப் பொறுப்பான சார்ஜண்ட் மேஜர்) (CSM)* | *15* |
| | *அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் 2 (ரெஜிமண்ட் உபகரணங்களுக்குப் பொறுப்பான சார்ஜண்ட் மேஜர்) (RQSM)* | *10* |
| | *அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் 2 (குழுவின் உபகரணங்களுக்குப் பொறுப்பான அலுவலர்) (CQSM)* | *7* |
| | *லான்ஸ் கோப்ரல்/ மேலைத்தேய/ கீழைத்தேய வாத்தியக் குழு/ கேர்ட்டன் லூஸ்/ டீ சொயிஸா/ சர்வதேச பிரதிநிதித்துவம்* | *5* |
| *சுற்றாடல் முன்னோடி* | *ஜனாதிபதி பதக்கம் (சிறப்பு விருது)* | *20* |
| | *ஜனாதிபதி பதக்கம் (திறமை)* | *16* |
| | *ஜனாதிபதி பதக்கம் (சாதாரண)* | *13* |
| | *தங்க வர்ணப் பதக்கம்* | *10* |
| | *வெள்ளிப் பதக்கம்* | *5* |
| *மாணவர் பாராளுமன்றம்* | *தேசிய மாணவர் பாராளுமன்ற பிரதமர்/ சபாநாயகர்* | *20* |
| | *தேசிய மாணவர் பாராளுமன்ற அமைச்சர்* | *10* |
| | *தேசிய மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்* | *8* |
| | *மாகாண மாணவர் பாராளுமன்ற பிரதமர்/ சபாநாயகர்* | *7* |
| | *மாகாண மாணவர் பாராளுமன்ற அமைச்சர்* | *05* |
| | *மாகாண மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்* | *02* |

***உச்ச பட்சம் 60 புள்ளிகள்***

### *6.6* பொது நியதிகள் – *I* ம் பகுதி

**அட்டவணை இலக்கம் *08:* விண்ணப்பிக்கும் வகுதிக்கு மேலதிகமாக ஏனைய வகுதிகளுக்கு புள்ளி வழங்குதல் (இணைப் பாடவிதான செயற்பாடுகள் தவிர்த்து)**

| **பெற்றுள்ள வெற்றிகள்** | **புள்ளிகள்** |
|---|---|
| *சர்வதேச மட்டம்* | *05* |
| *தேசிய மட்டம்* | *04* |
| *மாகாண மட்டம்* | *03* |

**உச்ச பட்சம் *05* புள்ளிகள்**

**அட்டவணை இலக்கம் *09:* இணைப் பாடவிதான செயற்பாடுகளுக்காக**

| **பெற்றுள்ள பதக்கங்கள்** | **புள்ளிகள்** |
|---|---|
| *ஜனாதிபதி சாரணர்/ பெண் சாரணியர் பதக்கம்/ அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் 1/ சுற்றாடல் முன்னோடி ஜனாதிபதி பதக்கம்/ தேசிய மாணவர் பாராளுமன்ற பிரதமர்/ சபாநாயகர்/ அமைச்சர்* | *05* |
| *பிரதமர் பரிசு/ முதல் நிலைப் பதக்கம்/ சர்வதேச முகாம்கள்/ நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்பு/ அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் 2/ பதவி நிலை சார்ஜண்ட்/ சார்ஜண்ட்/ தங்க வர்ணப் பதக்கம்/ வெள்ளிப் பதக்கம்/ தேசிய மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்/ மாகாண மாணவர் பாராளுமன்ற பிரதமர்/ சபாநாயகர்/ அமைச்சர்* | *04* |
| *லான்ஸ் கோப்ரல்/ மேலைத்தேய/ கீழைத்தேய வாத்தியக் குழு/ கேர்ட்டன் லூஸ்/ டீ சொயிசா/ சர்வதேச பிரதிநிதித்துவம்/ பசுமைப் பதக்கம்/ மாகாண மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்/ சபாநாயகர்/ வலய மாணவர் பாராளுமன்ற பிரதமர்/ சபாநாயகர்* | *03* |
| *சாரணர்/ பெண் சாரணியர்/ ரேஞ்சர் அங்கத்துவம்/ வலய மாணவர் பாராளுமன்ற அமைச்சர்/ உறுப்பினர்* | *02* |

**உச்ச பட்சம் *05* புள்ளிகள்**

### *6.7* பொது நியதிகள் *II* ம் பகுதி

**க.பொ.த (உ.த) இல் அனுமதி பெறுவதற்குரிய க.பொ.த (சா.த) பெறுபேறு**
**அட்டவணை இலக்கம் *10:* க.பொ.த (சா/த) பெறுபேறுகளுக்கு புள்ளி வழங்குதல்**

| | |
|---|---|
| *ஒன்பது பாடங்களுக்கும் A சித்தியுடன் சா.தரத்தில் சித்தியடைதல்.* | *6* புள்ளிகள் |
| *ஏதேனும் 6-8 பாடங்களில் A சித்தியுடன் சா.தரத்தில் சித்தியடைதல்.* | *5* புள்ளிகள் |
| *ஏதேனும் 4-5 பாடங்களில் A சித்தியுடன் சா.தரத்தில் சித்தியடைந்திருத்தல்.* | *4* புள்ளிகள் |
| *ஏதேனும் 1-3 பாடங்களில் A சித்தியுடன் சா.தரத்தில் சித்தியடைதல்.* | *3* புள்ளிகள் |
| *3 திறமைச் சித்திகளுடன் சா.தரத்தில் சித்தியடைதல்.* | *2* புள்ளிகள் |

**உச்ச பட்சம் *06* புள்ளிகள்**

### *6.8 ஆராய்ச்சித் துறைக்குரிய செயற்பாடுகள் மற்றும் வெற்றிகள்*

***அட்டவணை இலக்கம் 11: ஆராய்ச்சிகளுக்காக புள்ளி வழங்குதல்.***

| ஆராய்ச்சிக்கான சந்தர்ப்பங்கள் | புள்ளிகள் |
|---|---|
| சர்வதேச மட்டத்தில் ஆராய்ச்சிகளை முன்னிலைப்படுத்துதல். | 08 |
| தேசிய மட்டத்தில் ஆராய்ச்சிகளை பிரசுரித்தல், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்/ பல்கலைக்கழகம் அல்லது கல்வி அமைச்சிற்கு முன்னிலைப்படுத்தியிருத்தல். | 07 |
| ஆராய்ச்சி ஒன்றை எழுத்து மற்றும் அச்சு ஊடகங்களில் பிரசுரித்தல். | 06 |
| தேசிய மட்ட போட்டியொன்றில் ஆராய்ச்சி சார் வெற்றிகள் | 05 |
| தேசிய மட்ட போட்டியொன்றில் ஆராய்ச்சிக்கான கௌரவிப்பைப் பெற்றிருத்தல். | 04 |
| மாகாண/ மாவட்ட மட்ட ஆராய்ச்சி சார் வெற்றிகள் | 03 |

***உச்ச பட்சம் 08 புள்ளிகள்***

### *6.9 பாடசாலையில் தலைமைத்துவம் வகித்தல்.*

***அட்டவணை இலக்கம் 12: தலைமைத்துவத்திற்கு புள்ளி வழங்குதல்.***

| தலைமைத்துவம் | புள்ளிகள் |
|---|---|
| கனிஷ்ட/ சிரேஷ்ட/ பிரதான மாணவர் தலைவர்/ விளையாட்டுத் தலைவர் | 03 |
| கனிஷ்ட/ சிரேஷ்ட/ உப பிரதான மாணவர் தலைவர்/ விளையாட்டுத் துணைத் தலைவர் | 02 |
| மாணவர் தலைவர் | 01 |

***உச்ச பட்சம் 03 புள்ளிகள்***

### *6.10 அரச/ அரை அரசாங்க/ தனியார் நிறுவனங்கள்/ அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள்/ யுனெஸ்கோ/ யுனிசெப் போன்ற கல்வி அமைச்சினால் முறையாக அனுமதி பெற்று நடாத்தப்படும் போட்டிகள்/ நிகழ்ச்சித்திட்டங்களுக்கு புள்ளி வழங்குதல் (உச்ச பட்சம் 03 புள்ளிகள்)*

***அட்டவணை இலக்கம் 13: நிறுவனங்களூடாக நடாத்தப்படும் போட்டிகளுக்கு புள்ளி வழங்குதல்.***

| பெற்றுக் கொண்ட நிலை | புள்ளிகள் |
|---|---|
| முதலாம் நிலை | 03 |
| இரண்டாம் நிலை | 02 |
| மூன்றாம் நிலை | 01 |

***உச்ச பட்சம் 03 புள்ளிகள்***

***மொத்தம் 100 புள்ளிகள்***

### *07 நேர்முகப் பரீட்சைகளை நடாத்தும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்*

*7.1* *சர்வதேச போட்டிகளுக்கு புள்ளி வழங்கும் போது அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அல்லது பிராந்திய அமைப்பு ஒன்றினூடாக நடாத்தப்பட்ட போட்டிகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்.*

*7. 2* *புத்தாக்கங்களுக்காக பெற்றுக் கொண்ட வெற்றிகளைக் கருத்தில் கொள்ளும் போது கல்வி அமைச்சு, இலங்கை பொறியியலாளர் நிறுவனம், புத்தாக்குணர் ஆணைக்குழு, தேசிய விஞ்ஞான மற்றம் அல்லது அரச பல்கலைக்கழகங்களூடாக நடாத்தப்பட்ட போட்டிகளில் பெற்றுக் கொண்ட வெற்றிகள் மாத்திரம் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.*

*7. 3* *அழகியல் வகுதியின் கீழ் விண்ணப்பித்துள்ள மாணவர்களைத் தெரிவு செய்யும் போது கல்வி அமைச்சின் அழகியல் கிளையினூடாக நடாத்தப்படும் அகில இலங்கை அழகியல் போட்டிகளை கருத்தில் கொள்ள வேண்டும். நடனப் போட்டிகளுக்காக கல்வி அமைச்சு, கலாசார அலுவலகள் அமைச்சு, டவர் மண்டப மன்றம் போன்ற நிறுவனங்களால் நடாத்தப்படும் அரச சிறுவர் நாடக விழா, அகில இலங்கை பாடசாலை நடனப் போட்டிகள், அகில இலங்கை பாடசாலை நாடகம் மற்றும் அரங்கியல் விழா போன்ற போட்டிகளில் சிறந்த நடிகர்/ நடிகை, சிறந்த துணை நடிகர்/ துணை நடிகை, சிறந்த குணச்சித்திர நடிப்பை முன்வைத்த மாணவர்/ மாணவியின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகள் மாத்திரம் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.*

*7.4* *விளையாட்டு வகுதியின் கீழ் விண்ணப்பித்துள்ள மாணவர்களைத் தெரிவு செய்யும் போது கல்வி அமைச்சின் விளையாட்டுக் கிளை, பாடசாலை விளையாட்டுச் சங்கங்கள், தேசிய விளையாட்டு சங்கங்கள், விளையாட்டுத்துறை அமைச்சு ஆகியவற்றினால் நடாத்தப்பட்ட போட்டிகளில் பெற்றுக் கொண்ட வெற்றிகள் மாத்திரம் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.*

### *08. புலமைப்பரிசில் வழங்கல்*

*8.1* *இரண்டாம் நிலைக் கல்விப் பருவத்தில் விசேடமான திறமைகளை வெளிக்காட்டிய மற்றும் உரிய வருடத்தில் தரம் 12 இல் அனுமதிக்கப்பட்டு க.பொ.த (உயர் தர) கல்வியை ஆரம்பிக்கும் மாணவர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு க.பொ.த (உயர் தரத்தில்) கல்வி கற்கும் 02 வருட காலப் பகுதியில் மாதாந்தம் ரூ. 2500/= வீதம் 20 புலமைப் பரிசில் தவணைக் கொடுப்பனவுகள் வழங்கப்படும். குறித்த 20 தவணைக் கொடுப்பனவுகளது பெறுமதியான ரூ. 50,000 மொத்த புலமைப் பரிசில் நிதியினை ரூ. 25,000 வீதம் இரண்டு தவணைகளில் புலமைப் பரிசில்தாரர்களது பெயரில் ஆரம்பிக்கப்படும் இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கியின் வங்கிக் கணக்கிற்கு வலயக் கல்வி அலுவலகத்தினால் நேரடியாக பரிமாற்றம் செய்யப்படல் வேண்டும்.*

*8.2* *அதே போன்று முதல் தடவை புலமைப் பரிசில் நிதித் தொகையை கணக்கில் வைப்பிலிட்ட பின்னர் புலமைப் பரிசில்தாரர் தொடர்ச்சியாக கல்விசார் செயற்பாடுகளில் ஈடுபடுதல் தொடர்பில் பாடசாலையினூடாக கண்காணித்ததன் பின்னர் இரண்டாம் தடவைக்குரிய புலமைப் பரிசில் நிதித் தொகையை வைப்பிலிடல் வேண்டும்.*

*8.3* *இப் புலமைப் பரிசில்தாரர்களை தொடர்ச்சியாக மேற்பார்வை செய்வதற்காக உரிய பாடசாலையினூடாக பொருத்தமான ஆசிரியர் ஒருவரை நியமித்துக் கொள்ள*

வேண்டும் என்பதுடன் அவ் ஆசிரியர் புலமைப் பரிசில்தாரருக்கு முறையான வழிகாட்டல்களை வழங்குதல் வேண்டும்.

*8.4* மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் இப் புலமைப் பரிசிலுக்காக தெரிவு செய்யப்பட்ட மாணவ மாணவியரின் பெயர்களை உரிய பாடசாலைகளுக்கு அறிவித்த பின்னர், குறித்த புலமைப் பரிசில்தாரர்கள் அப் பாடசாலையில் தொடர்ச்சியாக கல்வி கற்கின்றார் எனவும் புலமைப் பரிசில் பெறுவதற்கு பொருத்தமானவர் எனவும் உறுதிப்படுத்தும் கடிதம் ஒன்றை பாடசாலையின் அதிபர் வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் பிரதியொன்றுடன் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். அதன் பின்னர் புலமைப் பரிசில் வழங்கப்படும் காலப் பகுதியினுள் குறித்த மாணவர் அப் பாடசாலையில் தொடர்ச்சியாக கல்வி கற்கின்றார் என்பதாக ஒரு கடிதத்தை பாடசாலையின் அதிபர் வருடாந்தம் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும் பிரதியொன்றுடன் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

*8.5* உரிய புலமைப் பரிசில்தாரர் ஏதேனுமொரு காரணத்திற்காக கல்வி கற்கும் பாடசாலையிலிருந்து விலகி வேறு பாடசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருப்பின், அது தொடர்பாக உறுதிப்படுத்தும் கடிதம் ஒன்றை அதிபர் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும் பிரதியொன்றுடன் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

### *09.* புலமைப் பரிசில் கண்காணிப்பு

*9.1* வலய மட்டத்தில் புலமைப் பரிசில்தாரர்களை கண்காணிக்கும் பணிகளை அவர்கள் கல்வி கற்கும் பாடசாலை உரித்தாகும் வலயக் கல்விப் பணிப்பாளர் மேற்கொள்ள வேண்டும். இதற்கான பொறுப்புக்களை சுபக புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரிடம் கையளிக்க வேண்டும்.

*9.2* மாகாண மட்டத்தில் புலமைப் பரிசில்தாரர்களை கண்காணிப்பதற்குரிய செயற்பாடுகளை மாகாணக் கல்விப் பணிப்பாளர் மேற்கொள்ள வேண்டும். இதற்கான பொறுப்புக்களை சுபக புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரிடம் கையளிக்க வேண்டும்

*9.3* தேசிய மட்டத்தில் புலமைப் பரிசில்தாரர்களை கண்காணிக்கும் பணியானது தேவையான சந்தர்ப்பங்களில் கல்வி அமைச்சின் பாடசாலை செயற்பாடுகள் கிளை மூலமாக மேற்கொள்ளப்படும்.

*9.4* சுபக புலமைப் பரிசில் தவணைக் கொடுப்பனவை செலுத்தியதன் பின்னர் அதன் முன்னேற்ற அறிக்கையினை இணைப்பு இலக்கம் *(05)* மூலம் கல்விச் செயலாளருக்கு மாகாண மட்டத்தி முன்னிலைப்படுத்துவது கட்டாயமாகும்.

### *10.* புலமைப் பரிசில் இரத்தாகக் கூடிய சந்தர்ப்பங்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் மற்றும் காரணங்கள் தொடர்பில் கருத்தில் கொண்டு சுற்றுநிருபத்திற்கமைய சுபக புலமைப் பரிசில்தாரர்களுக்கு வழங்கப்படும் புலமைப் பரிசில்களை இரத்துச் செய்வதற்கான அதிகாரம் கல்விச் செயலாளரைச் சாரும்.

I. புலமைப் பரிசில்தாரர் ஒழுக்க விரோத நடத்தை ஒன்றிற்காக தண்டனை பெறல்
II. தொடர்ச்சியாக பாடசாலைக்கு வருகை தராமை

*III.* *தொடர்ச்சியான கல்விச் செயற்பாடுகளிலிருந்து வெளியேறல்*

*IV.* *க.பொ.த (உ.த) கல்வியை நிறைவு செய்யாமல் பாடசாலையிலிருந்து இடைவிலகல்.*

*இச் சுற்றுநிருபத்தில் ஏதேனும் சிக்கல்கள் இருப்பின் அவ் விடயம் தொடர்பாக கல்வி செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். இச் சுற்றுநிருபத்தின் தமிழ் மொழிபெயர்ப்பில் ஏதேனும் சிக்கல்கள் அல்லது தெளிவற்ற தன்மைகள் இருக்கும் பட்சத்தில் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழிப் பிரதியின் ஆலோசனைகள் பின்பற்றப்படல் வேண்டும்.*

*ஜே.எம் திலகா ஜயசுந்தர*
*செயலாளர்*
*கல்வி அமைச்சு*

*பிரதி – கணக்காய்வாளர் நாயகம்- கணக்காய்வாளர் நாயகத் திணைக்களம்*